# இளைஞர் ஆண்டு - 2020

**இளைஞரே, ஆற்றலோடு மாற்றம் நோக்கி...**

# இளைஞருக்கான சிலுவைப்பாதை

• பணி. ம.டைட்டஸ் மோகன்,
இயக்குனர், தகஇஇ, குழித்துறை மறைமாவட்டம்

..........................................................................................................................................................

**முன்னுரை**

33 வயதிலே சிம்மாசனம் கண்ட இலட்சிய இளைஞன் இயேசு நம்மோடு பேசும் நேரமிது! இளைஞனே, என் எருசலேம் பயணத்தை மேற்கொள்ள வந்திருக்கும் உன் ஆர்வத்தைக் கண்டு ஆனந்தம் கொள்கிறேன். இன்று மட்டுமல்ல, என் பயணம் என்றும் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்! நான் நடந்து கொண்டிருக்கும் பாதை உனக்குத் தெரியுமா? பாதையில் நான் சந்திக்கும் சவால்கள்தான் உனக்குப் புரியுமா?

பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட வாழ்க்கைப் பயணமிது! அலட்சியப் பாதைகளைக் கடக்கும் இலட்சியப் பயணமிது! மாற்றுப்பாதையிலே துணிந்து பயணிக்கும் வேட்கைப் பயணமிது! இலட்சியத் தெளிவு, பொதுநலக் கரிசனைக் கொண்ட மூலக்கூறு பயணமிது! சுருங்கக்கூறின் உயிர்ப்புப் பயணமிது! இந்தப் பயணத்தில் நீயும் என் உடன் பயணியாய் இருப்பது எனக்கு மகிழ்வே!

ஆனால், ஒன்றை மட்டும் உனக்கு நினைவூட்டுகிறேன். சும்மா இருப்பதாலோ, சுகமாய் அலைவதாலோ கிடைத்துவிடாது இந்தப் பயணம். மாறாக, உன் பார்வையில் தெளிவு இருக்கட்டும்; பயணத்தில் துணிவு பிறக்கட்டும். வா! என்னோடு நீயும் எருசலேமுக்கு...

## 1. தீர்ப்பு

இளைஞர்களே! இருவகை தீர்ப்பு உண்டு. ஒன்று, நம்மை நாமே தீர்ப்பிடுவது. மற்றொன்று, பிறர் நம்மைத் தீர்ப்பிடுவது. இவ்விரண்டும் ஆளுமைச் சிதைவுகளின் வெளிப்பாடுகளே! பரபாஸை விடுதலைச் செய்து விட்டு, எருசலேமில் இன்றும் இணைப்புப்பாலம் என்று அழைக்கப்படுகின்ற இடத்தில் வைத்துதான் பிலாத்து என்னை "இதோ மனிதன்" என்று தீர்ப்பிடுகிறான். எனக்கு வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு பிலாத்து மட்டும் காரணமல்ல. நேற்று இரவு கெத்சமனித் தோட்டத்தில் என் ஆன்மா துயருற்று தவித்தபோது தூங்கிக் கொண்டிருந்த சீடர்கள், முத்தமிட்டு காட்டிக் கொடுத்த யூதாஸ்... மன்னித்து விடுங்கள். அவர்களை தீர்ப்பிடுவது தவறு. எனக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு மனுக்குல மீட்பிற்கானப் பரிசு. எனக்கு இத்தீர்ப்பை வழங்கியவர்களையும் நான் தீர்ப்பிடேன், என்னையும் நான் தீர்ப்பிடேன்.

சுயஆய்வு செய்து பாருங்கள் இளைஞர்களே! தெண்டச்சோறு, போக்கத்தவன், செலவு, வீண், அடங்காப் பிடாரி... என்றெல்லாம் உங்களைப் பார்த்து இந்த உலகம் தீர்ப்பிடுவது எதனால்? நான் அழகில்லை, எனக்கு அறிவில்லை, என் குடும்பம் சரியில்லை... என்றெல்லாம் சுயத்தை ஏற்க மறுத்து உங்களையே நீங்கள் தீர்ப்பிடுதல் தவறன்றோ?

**செயல்பட**

- ✷ பிறரின் தீர்ப்புகளில் உண்மை இருக்கிறதா? என்பதை உணர்ந்து செயல்படுவேன்.
- ✷ என்னை நான் இருக்கிற நிலையிலே ஏற்று அன்பு செய்வேன்.

**செபம்**

இறைவா! பிறர் கூறும் தீர்ப்பில் உண்மையைக் கண்டறியும் பொறுமையையும் மெய்யறிவையும் தாரும். என்னையே நான் தீர்ப்பிடாமல் இருக்கும் நல்மனம் தாரும் - ஆமென்.

## 2. சுமக்கவா? சுமத்தவா?

இளைஞர்களே! வாழ்வின் சிலுவைகள் இரண்டு. முதல் வகை, சுயநலத்தால் சுமக்கும் சிலுவைகள். இரண்டாம் வகை, பொதுநலத்தால் சுமக்கும் சிலுவைகள். நான் சுமக்கும் சிலுவை இரண்டாம் வகையே!

எனது - எனது குடும்பம் - எனது உறவுகள் எனும் குறுகிய வட்டத்தின் வளர்ச்சிக்காய் மட்டுமே அயராது உழைத்தல், பொருளீட்டுதல், உதவி செய்தல்... இவற்றால் மலர்வதுதான் சுயநலச் சிலுவைகள். மாறாக, எல்லோரும் எல்லாம் பெற்று இன்புற்றிருக்க வேண்டுமென்ற நோக்கில் செயல்படுவோர் அனுதினம் பொதுநலச் சிலுவைகளையே சுமக்கிறார்கள்.

நீ கலெக்டராகணும், நீ இஞ்சினியர் ஆகணும், நீ டீச்சர் ஆகணும் என்று உங்கள் தந்தை அல்லது தாய் அல்லது சகோதரர்கள் உங்கள் மீது திணித்தக் கனவுகளையே சுமந்து கொண்டிருக்கிறீர்கள் என்றால் நீங்கள் எதிர்காலத்தில் சுயநலச் சிலுவைகளை மட்டுமே சுமப்பவர்களாய் மாறுவீர்கள். என்னைப் போல பொதுநலத் ஈகத்தில் வாழ, வீதியில் வந்து உரிமைகளுக்காய் போராட பொதுநலச் சிலுவைகளான மக்களின் அடிப்படை உரிமைகளுக்காய் குரல் கொடுப்பீர்களா?

**செயல்பட**

- ✷ கல்லூரிகளில் செயல்படும் தேசிய மாணவர் படை, செஞ்சிலுவைச் சங்கம், சாரணர் இயக்கம் போன்ற அமைப்புகளில் இணைவேன்; பங்குகளில் இளைஞர் இயககத்தில் இணைவேன். பொதுநலனுக்காய் செயல்படுவேன்.
- ✷ பணம் அதிகம் சம்பாதிக்கும் துறையல்ல, மக்கள் அதிகம் பயன்படும் துறையை தேர்ந்தெடுத்து படிப்பேன்.

**செபம்**

இறைவா! நான்கு சுவர்களுக்குள் பிராய்லர் கோழி போல் அடைந்துவிடாமல், விசாலப் பார்வைக் கொண்டு, சமூகத்தில் செயல்பட என்னைத் தூண்டி எழுப்பும் - ஆமென்.

## 3. தடுமாற்றம்… நடைமாற்றம்

இளைஞர்களே! வீழ்வது மனித பலவீனம். வீழ்ந்தே கிடப்பது மதியீனம். வீழ்ந்தும் எழுவது மனிதம். வடிந்தோடும் இரத்தம், பாறாங்கற்களின் யுத்தம் என்னை வீழ்த்தியது உண்மைதான். ஆனால் மதியீனனாய் நான் வீழ்ந்தே கிடக்கவில்லை என்பதுதான் உனக்கு நான் சுட்டிக்காட்டும் சவால்.

மனசாட்சிக்கு விரோதமாய் விழுந்த யூதாஸ் எழும்பிட முயற்சிக்காததன் விளைவு தற்கொலை. மறுதலித்த பேதுரு மனமாறியதன் விளைவு புதுவாழ்வு. நானும் உங்களது இளமைப்பருவம் கொண்டவன். துடிப்பும் - வெடிப்பும், ஆர்வமும் - ஆவேசமும், வேகமும் - சோகமும் கலந்ததுதான் நீங்கள் வளரும் இளமைப்பருவம். இப்பருவத்தில் உங்கள் உணர்வுகளை நெறிப்படுத்துவதும், உறவுகளைச் சீர்படுத்துவதும் அவசியம் என்பதை மறவாதீர்கள்!

வரும் தடுமாற்றத்தை ஏற்றுக்கொள்வோம். ஏற்பட்ட தடுமாற்றத்தை நீக்கத் தேவையான நல்லறிவையும் நல்லுறவையும் வளர்த்துக்கொள்வோம்.

**செயல்பட**

✷ என் வாழ்வில் எழும் தடுமாற்றங்களைப் பட்டியலிடுவேன். அவற்றைக் கையாளும் யுக்திகளைப் பெரியோரின் அறிவுரைகள் - நூல் அறிவு - பட்டறிவு முதலியவற்றின் வழியாகக் கற்றுக்கொள்ள முயல்வேன்.

**செபம்**

இறைவா! தடுமாற்றம் இல்லாத வாழ்வை நான் கேட்கவில்லை. தடுமாற்றத்தின்போது நடை மாற்றங்களுக்கான யுத்திகளை உள்ளுணர்வாகப் பொழிவாய் - ஆமென்.

## 4. சந்திப்பு – தித்திப்பு

இளைஞர்களே! என் தாயின் சந்திப்பு என் இலட்சியப் பயணத்தில் ஒரு தித்திப்பு. தனக்குப்பின் தான் தன் பிள்ளைகள் சாக வேண்டுமென்று நினைக்கும் பெற்றோர் மத்தியில் என் தாயின் உத்வேகத்தைப் பார்த்தாயா? காரணம் தெரியுமா? என்னோடு சேர்ந்து எனக்கான இலட்சியக் கனவினைக் கண்டவள் என் தாய். கருவறையிலே என் கனவுக்கும் உரு கொடுத்தவள்.

அழுது புலம்பவோ, ஆறுதல் சொல்லவோ வரவில்லை என் தாய். 'உனக்கேன் இந்த வம்பு, ஒதுங்கி விடு' என்று உதாசீனப்படுத்தவும் வரவில்லை. மாறாக, என் சிலுவையின் அடியில் நின்று என் இலட்சியம் நிறைவேறுவதைக் கண்டு மகிழ அனுமதிப் பெற வந்திருக்கிறார்.

உங்களது இலட்சியத்திற்காய் மௌனமாக உங்களது தாய் உங்களோடு நடைபயில முயற்சிக்கும் தருணங்களை நீங்கள் உணர்ந்து கொள்வது உண்டா? உங்களைச் சந்திக்க ஆசைப்படும் உங்களது தாயை நீங்கள் நிந்திக்கும் தருணங்கள் உண்டா? உங்களது இலட்சிய நிறைவே உங்களது தாய்க்கு மகிமை!

நீங்கள் கண் அயர்ந்துவிடாமல் படிக்க இரவு முழுவதும் உங்களுக்காகக் காத்திருக்கும் உங்களது தாய்... உங்களது சோர்வுற்ற நிலையிலே உடனிருந்து ஊக்கமூட்டும் உங்களது தாய்... என்னே அவள் பெருமை!

**செயல்பட**

- ✷ என் தாயின் ஈகச் செயல்பாடுகளைத் தினமும் நினைவுகூர்வேன்.
- ✷ நற்பண்புகளால், நற்படிப்பினைகளால் என் தாய்க்கு பெருமை சேர்ப்பேன்.
- ✷ என் சாதனையில் என் தாயை முன்னிலைப்படுத்துவேன்.

**செபம்**

இலட்சியத் தாயின் இலட்சிய இளைஞரே! என் தாய்க்கு நல்ல உடல் - உள்ள நலம் தந்து காத்திடுவாய் - ஆமென்.

## 5. நல்ல நண்பனாய்…

இளைஞர்களே! பழுமரம் நாடிச் செல்லும் பறவைப் போல என்னை விட்டகன்ற என் சீடர்கள், புதர்போல் மனிதநேயமின்றி புதைந்து போன யூதர்கள் மத்தியில் நல்ல சமாரியன் சீமோனின் நட்பு எனக்கு ஆறுதல் அளிக்கிறது.

உங்களது மின்னஞ்சல் நட்பினைக் கவனமாக நீங்கள் கையாள்வது இன்றைய அவசியம். பேஸ்புக், இன்ஸ்டகிராம், டுவிட்டர்… போன்ற சமூக வலைத்தளங்களில் நீங்கள் தொடர்பு கொள்ளும் முன்பின் தெரியாத நபர்கள், முன்னுக்கு முரணாகப் பதிலளிக்கும் நபர்கள்… போன்றவர்களை நீங்கள் நிஜமென நம்பி இருக்கிறீர்கள். ஏமாந்து விடாதீர்கள்.

'என்னுடையது என்னுடையது, உன்னுடையதும் என்னுடையதே' எனும் சுரண்டல்வாதிகள் அல்லது 'என்னுடையது என்னுடையது, உன்னுடையது உன்னுடையது' என சுருங்கிப் போகும் சுயநல வியாதிகளையே நீங்கள் பற்றிக் கொள்ளாதீர்கள். மாறாக, எனக்கு உதவி புரிந்த சீமோன் போன்று, "என்னுடையது உன்னுடையது, உன்னுடையதும் உன்னுடையதே" என்னும் ஈக மனம் தான் நட்பின் சிறந்த இலக்கணம் என்பதை உணர்ந்துச் செயல்படுங்கள்…

**செயல்பட**

- ✷ பிறருக்கு நான் நல்ல நண்பனாய், நல்ல பழக்கம் கொண்ட நண்பனாய் விளங்குவேன்.
- ✷ என் நண்பர்கள் வட்டத்தை விசாலப்படுத்துவேன்.

**செபம்**

இறைவா! என்னையே நான் சந்திக்கவும், என் நண்பர்கள் மத்தியில் நல்லவற்றையே சிந்திக்கவும் அருள்தாரும் - ஆமென்.

## 6. து(உ)டைத்து விடு

இளைஞர்களே! நல்லது செய்ய துணிந்த என் சகோதரி வெரோணிக்காவைப் பார்த்தாயா? தடைகளை விடைகளாக்கிய வீரமங்கை அவள். என் முகத்தை துடைத்து விட ஆதிக்கச் சக்திகளின் அடிமைச் சங்கிலிகளை உடைத்து விடுகிறாள். நீங்களும் நல்லவற்றிற்காய் தீவினைகளை உடைக்க முற்படும் ஒவ்வொரு நொடியும் என் அழுக்கு முகத்தை துடைத்து அழகு சேர்க்கிறீர்கள்.

நாளைப் பார்க்கலாம் என்றவாறே நீங்கள் தேக்கி வைத்திருக்கும் அழுக்கு மூட்டைகள் எத்தனை எத்தனை? சாதி - மதம் - இனம் - மொழி - பாலின வேற்றுமைகளுக்கு உரமூட்டும் செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளீர்களா? பிறர் என்ன நினைப்பார்கள், தலைமை என்ன நினைக்கும், சட்டம் மீறுவதாகி விடுமோ… இதுபோன்ற அச்சத்தில் எழும் தடைகளைத் துடைத்து விடமாட்டீர்களா?

**செயல்பட**

- ✷ என்னில் உடைபட வேண்டிய முன்சார்பு எண்ணங்கள், அவநம்பிக்கை வார்த்தைகளை இனம் காண்பேன்.
- ✷ இனம் கண்ட அடிமைத்தனச் செயல்களை நீக்க ஒவ்வொரு நாளும் செயல்திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துவேன்.

**செபம்**

உடைபட்டவருக்காய் உம்மையே உடைத்த இறைவா! என் இளமைப்பருவ வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக உள்ள அனைத்து எண்ணங்கள் - செயல்களை இனம் கண்டு அகற்றிடும் அருள்தாரும் - ஆமென்.

## 7. எழுவது எப்போது?

இளைஞர்களே! மின்னலுக்குப் பயந்து கதவுகளை மூடுபவர்களை மழை ஒருபோதும் வருடுவதில்லை, இன்னலுக்குத் துணிந்து பயணங்களை மேற்கொள்பவர்களை வெற்றி ஒருபோதும் விடுவதில்லை. இதுதான் உண்மை.

உடல் பலவீனத்தை விட உள பலவீனம் தான் வேகம் கொண்டது. சுட்டெரிக்கும் வெயில், சோர்ந்து விட்ட கை கால்கள், கல்லும் முள்ளும் பதம் பார்த்த கால்கள் அனைத்தும் உடலை பலவீனமாக்கினாலும் உள்ளம் பலவீனம் அடையவில்லை. எனவேதான் என்னால் தொடர்ந்து கல்வாரிப் பயணத்தை மேற்கொள்ள முடிகிறது.

உங்களது குணநலன்களை முன்னேற்ற நீங்கள் மேற்கொண்ட பயிற்சிகள், நீங்கள் விட்டுவிட நினைத்த தீய பழக்கவழக்கங்கள், நீங்கள் கட்டியெழுப்ப முனைந்த நல் உறவுகள் ஏற்றம் பெறவில்லை என்றோ, நினைத்தது நடக்கவில்லை என்றோ ஏங்கி பயிற்சியை, முயற்சியை கைவிட்டு விடுகிறீர்கள் என்றால் உங்களது உள்ளம் பலவீனம் அடைந்துவிட்டது என்பதில் ஐயமில்லை. உள பலவீனம் உடலையும் பலவீனமாக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள். முயற்சிக்கு எல்லையில்லை என்பதை உணர்ந்து நடந்திடுங்கள்.

**செயல்பட**

- ✷ நல்லெண்ணத்தோடு ஆரம்பித்து தற்போது முடங்கிக் கிடக்கும் செயல்பாடுகள் என்னென்ன என்பதை இனம் காண்பேன்.
- ✷ இனம் கண்ட செயல்பாடுகளை வாரம் ஒன்று வீதம் செயல்முறைப்படுத்துவேன்.

**செபம்**

பலவீனங்களை பலமாக்கும் இயேசுவே! என் உடல் பலவீனங்கள், உள்ள பலவீனங்களை உம்மிடம் அர்ப்பணிக்கிறேன். வலு கொடும் வாழ்வில் வளம் சேரும் - ஆமென்.

## 8. கண்ணீர்

இளைஞர்களே! இன்று ஆறுதல் விரும்புவோர் அதிகம். அதே வேளையில் ஆறுதல் கொடுப்போர் குறைவு. துன்பத்தில் துவளும் ஒருவர் மற்றொரு துன்பத்தில் துவள்பவருக்கு ஆறுதல் கொடுப்பது நலமளிக்கும் அருமருந்து. என் இழிநிலைக்கண்டு கண்ணீரும் கவலையுமாய் அழுது புலம்புகின்றனர் எருசலேம் மகளிர். அவர்களின் அழுகைக்கு நான் ஆறுதல் கொடுக்கிறேன்.

உங்களது அழுகைக்கான காரணங்களை எண்ணிப்பாருங்கள்? உங்களது தீஞ்செயல்களால் கண்ணீர் வடிக்கும் நபர்களை எண்ணிப்பாருங்கள்? நீங்கள் கண்ணீர் விட்டாலும் பரவாயில்லை. ஆனால் பிறர் கண்ணீருக்கு வழிவிடாதீர்கள்! நீங்கள்,

- இலட்சியத்தை அலட்சியம் செய்யும் போது
- போதையால் பாதை மாறும் போது
- காதல் வயப்பட்டு கடமையை உதறித் தள்ளும்போது
- கட்டுப்பாடின்றி தான்தோன்றித் தனமாய் சுற்றி அலையும் போது…
- கருவறையிலே சுமந்த தாயை, இதய அறையிலே தாங்கிய தந்தையை உதாசீனப்படுத்தும் போது…

கண்ணீர் விடும் உங்களது பெற்றோர், சகோதரர்களோடு சேர்ந்து நானும் கண்ணீர் வடிக்கிறேன் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். எனக்கு உங்களது நற்செயல்பாடுகளால் ஆறுதல் கொடுப்பீர்களா?

**செயல்பட**

✷ பிறர் கண்ணீர் வடிக்கும் அளவிற்கு என்னிடம் உள்ள தீயச் செயல்பாடுகள் என்னென்ன?

✷ அவற்றைக் களைந்துவிட நான் முன்னெடுக்கும் செயல்பாடுகள் என்னென்ன?

**செபம்**

கண்ணீர் விட்டு அழுது மனிதநேயத்தை வெளிக்கொணர்ந்த இயேசுவே! நீ நான் வடிக்கும் கண்ணீர் மனம் மாற்றத்தால் மலரும் ஆனந்தக் கண்ணீராய் மாற செயல்பாட்டு மாற்றத்தைத் தாரும் - ஆமென்.

## 9. சூழல் கைதியாய்

இளைஞர்களே! மூன்றாம் முறை நான் கீழே விழுந்து எழுகிறேன். எதற்காக? நீங்கள் மனம் மாற்றம் பெற என்பதற்காக! உங்களது ஊன உறவுகள், உங்களது துரித உணவுகள், உங்களது அரைகுறை ஆடைகள், உங்களது ஆபாச ஊடகங்கள்… என்று நீங்கள் விழுந்து கிடக்கும் தளங்கள் தெரிகிறதா?

பல் துலக்கும் முன்னே உங்களைப் போல ∴பேஸ்புக்கில் நுழைவோர் அதிகம். கடந்த 12 மாதங்களில் மட்டும் இணையதளம் பயன்படுத்தும் உங்களைப் போன்ற இளைஞரில் 56% பேர் இணையதள மோசடிக்கு ஆளாகியிருக்கிறார்கள் (தினமணி, 14 செப் 2012). இது உங்களுக்குத் தெரியுமா? தூங்கும் போதும் தலையணைக்கடியில் அலைபேசியை வைத்து தூங்குகிறீர்களே, அதிலிருந்து வெளிவரும் எலக்ட்ரோ மேக்னடிக் கதிர்வீச்சு புற்றுநோய் ஏற்படக் காரணம் என்பதை அறிவாயா? ஒரு மனிதன் ஒரு நாளைக்கு 18 முதல் 24 நிமிடங்கள் மட்டுமே செல்போனைப் பயன்படுத்துவது நல்லது என்பதை உணர்வீர்களா? பார்த்து சமைத்து பாசத்தோடு தாய் ஊட்டும் உணவு உனக்கு சுவையில்லை என்பதால் பிஸ்ஸா, பர்கர், பிரஞ்சு பிரை, நூடுல்ஸ், ஸ்கரேம்பல்ட் எக், ஈஸி ∴ப்ரைடு ரைஸ்… என மோனோசோடியம் குளுடாமேட் (செயற்கை சுவையூட்டி) கலந்த துரித உணவினை உண்டு உடலைக் கெடுக்கிறீர்களே! ஆறு அல்லது எட்டு பைகள் கொண்ட கால்சட்டை, நீளம் குறைந்த சட்டை, சன்னல் வைத்த ஜாக்கெட்டுகள், இரு சக்கர வாகனத்தில் இரண்டுக்கும் மேற்பட்டோர் அமர்ந்து விர்ரென்று செல்வது… இவைதான் உங்களது முகவரிகளா?

இவ்வாறு உங்களது பண்பாடு - கலாச்சாரம் - உணவு போன்றவற்றை நீங்கள் மறந்து வாழும் ஒவ்வொரு முறையும் நான் வீழ்ந்தே கிடக்கிறேன்.

**செயல்பட**

- ✷ ஊடகங்களை தேவைக்கு மட்டுமே பயன்படுத்துவேன். கால அளவு குறித்து அவற்றைப் பயன்படுத்துவேன்.
- ✷ முடிந்தளவிற்கு வீட்டு உணவையே உண்பேன்.

**செபம்**

உமது சாயலாக என்னைப் படைத்த இறைவா! உமது படைப்பின் நோக்கத்தை நான் உணர்ந்து செயல்பட வரம் தாரும் - ஆமென்.

## 10. தோலுரிக்கப்படும் சுதந்திரம்

இளைஞர்களே! நடைபெறும் அலங்கோலத்தைப் பார்த்தாயா? மானம் காப்பது ஆடை. அந்த ஆடையையே என் அனுமதியின்றி அடக்குமுறையால் கழற்றுகிறார்கள். தாங்கள் நினைப்பது போல் செய்வதுதான் 'சுதந்திரம்' என்ற சுயநலத்தை அல்லவா அவர்களது செயல்கள் சுட்டிக்காட்டுகிறது.

சும்மா இருப்பதும், நினைத்ததையெல்லாம் செய்வதும் சுதந்திரம் என்ற போதையில் நீங்களும் வாழ்வது என் கண்களுக்கு நெருடலாக உள்ளது. 'எங்களைப் பற்றி அறிய வேண்டுமானால் எங்கள் உலகிற்கு வாருங்கள்' என்கிறீர்கள். கடமையும் கண்ணியமும் கட்டுப்பாடுமின்றி உனக்கென உருவாக்கியிருக்கும் உலகில் நீங்கள் நடந்து கொள்ளும் முறைகளைக் கற்று சுய ஆய்வு செய்து பார்?

இளைஞர்கள் என்றாலே தலைவலி, அடங்காப்பிடாரிகள், குழப்பவாதிகள்... என்றெல்லாம் இந்தச் சமூகம் உங்களை இனம் காண்பதற்குக் காரணம் நீங்கள்தானே! வாழ்விலே கொள்கையின்றி கோட்பாடின்றி, நோக்கும் போக்குமின்றி துவண்டு கிடக்கும் ஒவ்வொரு தருணங்களையும் சிந்தித்துப்பாருங்கள். 'நான் நினைப்பதெல்லாம் செய்வேன். அது என் சுதந்திரம்' என்று எங்கும் எதிலும் புலம்பாதீர்கள். அது உங்களது மடமைத்தனம். கடமையுணர்வோடும், பொறுப்புணர்வோடும் அமையும் சுதந்திரம் மட்டுமே உண்மை சுதந்திரம்!

**செயல்பட**

- ✷ எப்படியும் செய்வேன் என்பதல்ல, இப்படித்தான் செய்வேன் என்று திட்டம் வகுத்து என் செயல்பாடுகளைத் தொடர்வேன்.
- ✷ என் இலக்கைத் தெரிவு செய்வேன்.

**செபம்**

தன் மானமிழந்து எம் மானம் காக்கும் இறைவா! உண்மைச் சுதந்திரம் எது என்பதை உணர்ந்து செயல்படும் வரம் தாரும் - ஆமென்.

## 11. வேண்டும் சிலுவை

இளைஞர்களே! அவமானத்தின் அடையாளமாய் ஆடையைக் களைந்தவர்கள், இப்போது அகிலத்திலிருந்தே என்னை அப்புறப்படுத்தும் நோக்கோடு சிலுவையில் அறைகிறார்கள். பாவம், உண்மை அறியாத கூட்டம்! என்மேல் சிலுவை இருப்பதும் சிலுவை மேல் நானிருப்பதும் ஒன்று தான். என்னிடமிருந்து சிலுவையையோ, சிலுவையிலிருந்து என்னையோ யாராலும் பிரிக்க முடியாது. சிலுவை தான் என் வாழ்வு.

துன்பம் வந்தால் துவண்டு விடுகிறீர்களே, துன்பமே வேண்டாமென்று ஒதுங்கி விடுகிறீர்களே என் மகனே, மகளே! தேர்வில் ஏற்படும் தோல்வியை உங்களால் தாங்க முடியவில்லை. காதலில் ஏற்படும் தோல்வியை உங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நினைத்தது நடக்காதபோது ‘செத்து விடலாம் போலிருக்கு’ என்கிறீர்கள். படிப்பிற்கேற்ற வேலைக் கிடைக்காத போது வாழ்வே முடிந்துவிட்டதாய் எண்ணுகிறீர்கள். உங்களை நான் என்னவென்பது?

யூதருக்கும் கிரேக்கருக்கும் மடமையான சிலுவை மீட்பின் சின்னமாக மாறியதற்கு காரணம் துன்பங்களைத் துணிச்சலோடு சந்தித்த என் மனஉறுதி தானே! உங்களது வாழ்விலும் சிலுவைகள் நிச்சயம் உண்டு, நிச்சயம் வேண்டும். நீங்கள் சுமக்கும் சிலுவைகளால் மட்டுமே நாளை உயிர்த்தெழுந்து புதுவாழ்வு பெற முடியும்.

**செயல்பட**

- ✷ துன்பங்களைத் துணிவுடன் சந்திப்பேன்.
- ✷ துன்பங்கள் கற்றுத்தரும் படிப்பினைகளைக் கடைப்பிடிப்பேன்.

**செபம்**

சிலுவையை சிம்மாசனமாக்கிய இயேசுவே! எனது வாழ்வில் வரும் துன்பங்களைக் கண்டு ஒதுங்கிவிடாமல் துணிவுடன் சந்தித்து வெற்றி காண ஆசீர் நல்கும் - ஆமென்.

## 12. இறப்பினை வெல்(கொல்)வோம்

இளைஞர்களே! எல்லோருக்கும் பொதுவான ஒன்று இறப்பு பற்றிய பயம். இறந்தபின் என்ன நடக்கும் என்று உறுதியாக யாருக்கும் தெரியாததால் வருவதே இந்தப் பயம். இறப்பினைக் கண்டு நான் ஒருபோதும் பயப்பட்டதே இல்லை. என் வார்த்தைகளால் செயல்களால் மரணத்தை வென்றவன் நான். நாசரேத்து தெருக்களிலே, கலிலேயக் கடற்கரையிலே, எருசலேம் வீதிகளிலே நான் நடந்து கொண்ட விதங்கள், செய்த நன்மைத்தனங்களால் இன்றும் என்றும் உங்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். திருவிவிலியம் இன்றளவும் 2196 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறதென்றால் பார்த்துக் கொள்! நல்லவைகள் நாளும் வளரும்.

நீங்கள் இறப்பைக் கண்டு பயப்படுகிறீர்கள் என்றால் வாழ்வை இன்னும் முழுமையாகப் பயனுள்ள விதத்தில் வாழவில்லை என்றே அர்த்தம். உங்களது வாழ்வைக் கண்டு இறப்புதான் பயம் கொள்ள வேண்டும். படிப்பு - பட்டம் - பதவி - செல்வாக்கு - புகழ் - குடும்பம் மட்டுமல்ல உங்களின் வாழ்வு. இப்படி நிலைகளுக்கு ஊடாக நீங்கள் நடந்து கொள்ளும் விதம், கற்றுக்கொள்ளும் மதிப்பீடுகள், கடைப்பிடிக்கும் படிப்பினைகள், உங்களது சுற்றம் தாண்டி நீங்கள் ஆற்றும் சேவைகள், பொதுநல அமைப்புகள், இயக்கங்களில் இணைந்து செயல்படும் சமூக அக்கறை… இவையே உங்களது இறப்பைத் தள்ளிப்போடும். இறப்பு உங்களை அடைந்தாலும் மக்கள் உங்களைக் காப்பார்கள்.

**செயல்பட**

- ✷ என் பள்ளி – கல்லூரி பருவத்தில் சமூக அக்கறையோடு இணைந்து செயல்பட விரும்பும் அமைப்பு எது?
- ✷ இவ்வாண்டிற்கான என் செயல் திட்டம் எது?

**செபம்**

வாழ்வின் நாயகனே இறைவா! என் நற்செயல்பாடுகளால் இவ்வுலகில் இறந்தும் வாழும் வல்லமை தாரும் - ஆமென்.

## 13. இலட்சியங்களின் சந்திப்பு

இளைஞர்களே! தங்களுக்குப் பின் தான் தங்கள் பிள்ளைகள் சாக வேண்டும் என்பதே எல்லா பெற்றோருடைய ஏக்கமும்! என் தாயின் மடியில் கிடக்கிறேன். என் தாயைப் பாருங்கள். உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும் என்று நான் குழந்தையாக இருந்தபோது சிமியோன் சொன்ன வார்த்தைகளைச் சிந்திக்கிறாள் என் தாய்! தலைமகன் தான் தாயின் இறுதிக் காலத்தில், அவளின் துன்ப துயரங்களில் உறுதுணையாக இருந்து சமுதாயக் கடமை ஆற்ற வேண்டும். ஆனால் என் வாழ்விலே மாற்றாய் நடக்கிறது.

தாய் மகனுக்கு இறுதிச் சடங்கு நிறைவேற்றுகிறாள். இந்த அவல நிலைக்காகவா வானதூதர் அன்று ‘‘அருள் நிறைந்தவளே வாழ்க! பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே’’ என்றார். ஆம், தன் ஒரே மகனையும் வளர்த்து, ஆளாக்கி இவ்வுலக நலனுக்காய், மாற்றத்திற்காய் அர்ப்பணித்த என் தாய் அருள் நிறைந்தவளே! என் இலட்சியத் தாயைப் போல உங்களது பெற்றோரும் திகழ வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

ஒன்றே ஒன்று, அதுவும் கண்ணே மணியே என்று வளரும் சூழல். இப்படிப் போனால் என் இறையாட்சித் தோட்டத்தில் வேலையாட்கள் இல்லாமல் போய்விடுவார்கள். டாக்டராகணும், இஞ்சினியராகணும்… என்று கனவு காணும் என் சகோதரமே, நீ ஏன் உன்னை இந்தச் சமூகத்திற்காய் ஒரு குருவாக, அருட்சகோதரியாக அர்ப்பணிக்கக் கூடாது.

**செயல்படு**

- ✷ இறையழைத்தலுக்காய் என்னை அர்ப்பணிப்பேன். குருவாக, அருட்சகோதரியாக மாற அருள் வேண்டுவேன்.
- ✷ இறையழைத்தலுக்காய் தினமும் செபிப்பேன்.

**செபம்**

வாழ்வு ஓர் அழைப்பு என்பதை உணர்த்தும் இறைவா! என் வாழ்வையும் உமது இறையாட்சிக்காய் மறைசாட்சியாக்க மாற்றும் அருள் தாரும் - ஆமென்.

## 14. முளைவிடவே விதைக்கப்படுகிறோம்

இளைஞர்களே! எல்லாம் நிறைவேறிய ஆனந்தம் எனக்கு! மெசியா எங்கே பிறப்பார்? எப்படிப்பட்டவராக இருப்பார்? என்ற எதிர்நோக்கோடு காத்திருந்தவர்களுக்கு என் பிறப்பு ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்று. அவ்வாறே இன்று என் இறப்பும்! மாற்றான் கல்லறையில் என்னைப் பதியம் போடுகிறார்கள். “இளவட்ட வயசு எதை எதையோ சாதிக்க வேண்டியவன், எதை எதையோ வாழ்வில் அனுபவிக்க வேண்டியவன் இப்படி அநியாயமாகக் கொன்றுவிட்டார்களே…” என்ற ஆதங்கம் உங்களுக்கும் தோன்றும். கவலைப்படாதீர்கள். கவலைப்பட ஒன்றுமில்லை. என் தந்தையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றிய ஆனந்தம் எனக்கு உண்டு. என்னை நாடியவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிய நிம்மதி எனக்கு உண்டு. இன்றும் என் பணியால் முடமான கால்கள் நடமாடுகின்றன. இடறான காரியங்கள் இடம் மாறிச் செல்கின்றன. தடையானச் சூழல்கள் விடையாகி நிற்கின்றன.

கல்வாரி நோக்கிய என் பயணத்திலே உடனிருந்த என் சகோதரமே! பதிமூன்று படிநிலைகளிலும் நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டிய படிப்பினைகளை உள்வாங்கி செயல்படுத்தும்போது நீங்களும் புதைக்கப்பட்ட விதையாகவே மாறுகிறீர்கள். முளைவிடும் வளமிக்க உங்களின் நிகழ்காலம் இனி ஏதோ கனவுகளின் கருத்தரிப்பு அல்ல. மாறாக, கஷ்டங்களின் இஷ்டங்கள். ஏழ்மையை அடைகாப்பதால் வரும் மேன்மைகள் என்பதை உணர்ந்துச் செயல்படுங்கள். இன்று நாம் புதைக்கப்படுவது அழிவதற்காக அல்ல உயிர்ப்பதற்காக. துன்பம் அடைவது துவண்டு விட அல்ல வெகுண்டெழுவதற்கு!

**செயல்பட**

- ✴ என் இலட்சியம் நிறைவேற எனக்காக தியாகங்களைச் செய்யும் பெற்றோர் - பெரியோர் - ஆசிரியப் பெருமக்களுக்காய் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்.
- ✴ நானும் பல இலட்சியமுள்ள இளையோரை உருவாக்கும் கருவியாய் செயல்படுவேன்.

**செபம்**

வளர்ச்சியில் எழுச்சி காணும் இலட்சிய வேந்தனே! என் இலட்சியத்தை அடைய உதவிக்கரம் நீட்டிய நல்லுள்ளங்களுக்காய் உமக்கு நன்றி செலுத்துகிறேன். வரும் நாட்களிலும் நாங்கள் இலட்சியப் பாதையில் வரும் அலட்சியங்களைக் கடக்க உம் அருள் தாரும் - ஆமென்.

## இறுதியாக... நாளும் நாமும் உயிர்ப்போம்

புதைந்த விதை முளைவிடும் என்று தெரியாதவர்கள், மறைந்த சூரியன் உதித்து விடும் என்று அறியாதவர்கள், பாறைக்குள் என்னை அடக்கி முடக்கி சரித்திரமில்லாமல் ஆக்கிவிட்டதாய் நினைக்கிறார்கள். பாவம், இவர்களின் எண்ணமும் ஏக்கமும் நிறைவேறவில்லை. காரணம், தோல்விகள் நிரந்தரமில்லை. ஏளனங்கள் ஒருபோதும் வெல்வதில்லை.

என் இலட்சிய இளைஞர்களே! நீங்கள் நடந்து வரும் வாழ்க்கைப் பயணத்திலும் எதிர்ப்புகள் உண்டு. எதிர்பார்ப்புகள் உண்டு. உங்களைப் பிடிக்காதவர்கள், உங்களுக்குப் பிடித்தவர்கள் உண்டு. அனைத்திலும் நம்பிக்கையோடு நடைபோடுங்கள்... நீங்களும் என்னோடு உயிர் பெறுவீர்கள்

❖❖❖